
**KANAIYAZHI** Art and Literary Magazine VOL 60 - ISSUE 03 - JUNE 2025

கலை இலக்கியத் திங்களிதழ்

# கணையாழி

மலர் : 60 இதழ் : 03 ஜீன் 2025 விலை ரூ.25/-



## வரலாறு விடுதலையான நாளும் கூட! – ம.ரா.

# உள்ளடக்கம்


**கட்டுரை**

அ. மோகனா 07
சொல் புதிது 22
கவிதைக்காரன் இளங்கோ 23
ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ் 55
மு.முருகேஷ் 60

**சிறுகதை**

முத்து ஜெயா 16
துவாரகா சாமி நாதன் 30
வாசுதேவன் அருணாசலம் 62

**கவிதை**

ரகுநாத் வ 14
கே. சச்சிதானந்தன் 15
செ.புனிதஜோதி 21
ஆர் வத்ஸலா 35
செ.பாலா 54

**கலைஞர் பதில்கள் 36**

**கடைசிப் பக்கம்**

இந்திரா பார்த்தசாரதி 69

KANAIYAZHI - VOL 60 - ISSUE 03 - JUNE 2025 - PP. 62-68



சிறுகதை
வாசுதேவன் அருணாசலம்

# "ஓங்க அப்பாவுக்கு என்னாச்சு!"

**கா**லையில் ஐந்தரை மணிக்கே எழுந்துவிட்டார் வழக்கம்போல. தனது துணைவி அமுதா, கல்லூரியில் பயின்றுவரும் தனது மகள்கள் பிரீத்தி, ஆனந்தி, தனது அப்பா கோபால் இவர்களின் தூக்கத்தைக் கலைத்துவிடக்கூடாது என்பதில் அதிக அக்கறை கொண்டவர் அரங்கசாமி, உடுமலை பி. எஸ்.என். எல் இல் துணைப் பொதுமேலாளர். வீட்டிற்கு வெளியிலிருக்கும் கழிப்பறையைப் பயன்படுத்திக்கொள்வார். உடுமலை சிவசக்தி காலனியில் அவருடைய வீடு தனித்திருக்கும். நான்குபுறமும் ஆறடி மதில் சுவர். இரண்டு கேட்டுகள். சிறியது ஒன்று. பெரியது ஒன்று. பெரிய கேட்டைத் திறந்துதான் 2014-இல் வாங்கிய அவருடைய மாருதி ஸ்விஃப்ட் காரை எடுக்க முடியும். அக்கம்பக்கம் யாரும் வீடுகட்டி இன்னும் வரவில்லை. வந்துவிடக் கூடாது என்ற எண்ணமும் அவருக்கு உண்டு. ஒரு தனிமை விரும்பி. அதிகாலை சிறிய கேட்டைத் திறந்து தனது இருசக்கர வாகனத்தை மெதுவாக வெளியே கொண்டுவந்து நிறுத்திவிட்டு கேட்டை மூடுவார். சுமார் முப்பது அடி தூரம் தனது இருசக்கர வாகனத்தைத் தள்ளிக்கொண்டு சென்று பின் அதனை இயக்கி அங்கிருந்து கிளம்புவார். இதுதான் அவருடைய வழக்கம். தினமும் உழவர் சந்தைக்குச் சென்று அன்றைக்குத் தேவைப்படும் காய்கறிகளை மட்டும் வாங்கிவருவார். மிக முக்கியமாக, அவருடைய வருகையை உழவர் சந்தைக் காய்கறி வியாபாரிகள் விரும்புகிறார்களோ இல்லையோ, அவர் அங்கிருந்து கிளம்பிச் சென்றுவிட்டார் என்றால், அத்தனை காய்கறி வியாபாரிகளுக்கும் நிம்மதி! அவ்வளவு நல்லவர். பேரம் பேசாமல் எதையும் வாங்கமாட்டார். 'எதையும் பேரம் பேசி வாங்கு' என்ற மந்திரம் அவர் மனதில் ஒலித்துக்கொண்டே இருக்கும். மறந்து எதையாவது வாங்கிவிட்டால், அன்று அவர் தூங்குவது சற்றுக் கடினம்தான். உழவர் சந்தைக்கு வெளியில் சாலை ஓரங்களில் தற்காலிகமாகப் போட்டிருக்கும் காய்கறிக் கடைக்காரர்களிடம்தான் எதையும் வாங்குவார். காரணம். உள்ளே பேரம் பேச முடியாது. கறுப்புப் பலகையில் விலை எழுதிப்போட்டிருப்பார்கள். அவர்கள் அளந்துபோடும் எடையைப் பற்றி எதுவும் சொல்ல முடியாது. உள்ளே போவார். அங்கிருக்கும் விலைப்பட்டியல்களை மனப்பாடம் செய்துவிட்டு, சந்தைக்கூடத்திற்கு வெளியே வந்துதான் காய்கறிகள் வாங்குவார்.

வெங்காயம் முருகேசனுக்கு இவரைக் கண்டவுடன், தன்னுடன் கடையிலிருக்கும் பையனை அழைத்து, “அவர் என்ன எடுத்தாலும் சரி எவ்வளவு கொடுத்தாலும் சரி வாங்கிக்க!. எதுவும் பேசாதே! பேசிப் பிராணனை விட்டுடாதே!” என்று எச்சரித்துவிடுவான். கதலிப்பழம் சிங்காரம் இரண்டு சீப்பு வாழைப்பழத்தை எடுத்து வைத்துவிடுவான். அரங்கசாமி என்ன கொடுக்கிறாரோ அதை எண்ணிக்கூட பார்க்க மாட்டான். அப்படியே சாக்குக்கடியில் போட்டுவிட்டு ஒரு பெரிய கும்பிடு ஒன்றையும் போட்டுவிடுவான். கேரட்-பீன்ஸ் கமலம் தராசில் எடைக்கல் போட்டு ஏமாற்றாத ஆளே கிடையாது. ஆனால் அவள் ஏமாறும் ஒரே நபர் அரங்கசாமிதான். முட்டைக்கோஸ் வசந்தா அரங்கசாமியைக் கண்டவுடன் அவளே ஒரு நல்ல முட்டைக்கோஸைத் தேடி எடுத்து, அதன் மேலிருக்கும் இரண்டு அல்லது மூன்று பூச்சி அரித்திருக்கும் தழைகளைக் களைந்து பளபளவென்றிருக்கிறதா என மீண்டும் ஒருமுறை உருட்டிப் பார்த்துச் சோதித்துவிட்டு அங்கே வரும் அரங்கசாமியிடம் நீட்டுவாள். அவர் எவ்வளவு கொடுக்கிறாரோ அதை வாங்கிக்கொள்வாள். கத்திரிக்காய் சண்முகம் கொஞ்சம் அகராதி. அன்று அரங்கசாமியைப் பார்த்தவுடன் “வாங்க சார். கத்திரிக்கா பூராவும் சொத்தயா இருக்கு! ஒண்ணுமே சரியில்ல! பூச்சி மருந்து வாடை தாங்க முடியல! இத வாங்கித் தின்பவன் கதி அதோ கதிதான்! புத்துநோய் வந்து செத்துப்போவான். ஒரு கிலோ வாங்கிட்டுப் போனாலும், காக்கிலோ கூடத் தேறாது. அதனால் காக்கிலோவுக்குத்தான் காசு” என்று முடித்தான். அரங்கசாமி சிரித்தே விட்டார். “சண்முகம், என்ன நல்லாப் புரிஞ்சு வச்சிருக்க. நானும் யாரையும் ஏமாத்த மாட்டேன். என்னையும் யாரும் ஏமாத்த முடியாது. அவ்வளவுதான். அரை கிலோ போடு! போதும்! உள்ள என்ன வெலன்னு தெரியுமா?” என்றார். “நாப்பது ரூபா சார். பாத்துட்டு வந்துதான் ஏங்கிட்ட கேட்கிறீங்கனு எனக்குத் தெரியும், சார்” என்றான் சண்முகம். “சரி! அரை கிலோ!. எடை சரியா இருக்கணும். அவ்வளவுதான்” என்றார். சண்முகத்திடம் கத்தரிக்காயை வாங்கிக்கொண்டு நகர்ந்தார். அன்று புதிதாய் வந்த இளைஞன் ஒருவன் இரண்டு பெட்டிகளிலிருந்து மாதுளம்பழங்களை எடுத்து குவித்துக் கொண்டிருந்தான். அரங்கசாமி அவனை நோக்கி நகர்ந்தார். “செத்தான்டா சீக்காளி” என்று தூரத்திலிருந்து கதலிப்பழம் சிங்காரம் சொன்ன வார்த்தைகள் அரங்கசாமியைக் கடந்து அந்த இளைஞனை அடைந்தது. அரங்கசாமி நின்று திரும்பி, சிங்காரத்தை அங்கிருந்தபடியே சில நொடிகள் பார்த்துவிட்டு அந்த இளைஞனை நோக்கி நடந்தார். “என்ன வெல?” என்றார். “நூறு ரூவா சார்!” என்றான். “எல்லாப் பழங்களுமா?” என்றார் அரங்கசாமி. அவருடைய நக்கல் அந்த இளைஞனுக்குச் சட்டென்று புரிந்தாலும், ”ஒரு கிலோ நூறு ரூவா, சார்” என்றான் சற்றுப் பொறுமையுடன். “ஏம்ப்பா! நாட்டுக்காய்க்கு இந்த வெல சொல்லுற?... ரோட்டோரம் போட்டு இருக்காங்க! எழுபத்தஞ்சு ரூவாதான்! நீ! எந்த ஊரு?” என்றார். ”சார்! அதெல்லாம் பிஞ்சுங்க சார். வெளச்சலுக்கு முன்னாடியே பிடுங்கி நாலு நல்ல அளவான காயோட சேத்து வித்துருவாங்க சார். இது சுத்த நாட்டுப் பழம், சார். மருந்து வைக்காம வெளைய வெச்சதுங்க” என்றான் அந்த இளைஞன். “இந்தா பாரு! இந்தக் கதையெல்லாம் எனக்கு வேணாம். சரியா வெலயச் சொல்லி ரெண்டு கிலோ போடு” என்றார். “பத்து ரூபாய் கம்மியாய், நூத்தித் தொண்ணூறு கொடுங்க சார் போதும். இன்னிக்கு நீங்கதான் மொதோ வியாபாரம்” என்றான் அந்த இளைஞன். “இந்தா பாரு! நூத்தம்பது வாங்கிக்கோ! ரெண்டு கிலோ போடு. அதுக்கு மேல கொடுக்க முடியாது”

என்றார் அரங்கசாமி. "என்னாங்க சார்! இப்படி அம்பது ரூவாயக் கொறைச்சீங்கன்னா ஒழைப்புக்கு அர்த்தமே இல்லீங்க" என்றான். "நீ... ஏதோ நெலத்துல வேர்வ சிந்தி ஒழைச்சு கொண்டுவந்து நேரடியா விக்கிற மாதிரிப் பேசுற!" என்றார். "உண்மதான் சார்... வேர்வ சிந்தி ஒழைச்சு வெளைய வெச்சப் பொருள்தான் சார் இது. எங்க தோட்டத்தில வெளஞ்சதுங்க... தரகரு ... யாவாரி ... எல்லாம் அடிமாட்டு வெலைக்குக் கேட்கிறாங்க சார்... பழ மண்டிக்கோ காய்கறி மண்டிக்கோ கொண்டுபோனா இன்னும் கேவலமான வெலைக்குக் கேட்கிறாங்க, சார். வண்டிக்கூலி போக லாவம்னு பார்த்தா எதுவும் நிக்கிறதில்லீங்க, சார்" என்றான் அந்த இளைஞன். "ஓம்பாடு ஒனக்கு! ரெண்டு கிலோ நூத்தம்பது ரூவா! கட்டும்னா கொடு! இல்லன்னா ஆளவிடு!" என்று அங்கிருந்து நகர முயன்றார் அரங்கசாமி. "சார்! இருங்க! காலேல மொதோ யாவாரம்! எடுத்துக்குங்க" என்றான். சாக்கிலிருந்து எடை மெஷினை எடுத்து வெளியில் வைத்து இடது தட்டில் ஒரு கிலோ படிக்கல்லை வைத்து, நான்கு மாதுளம் பழங்களை எடுத்து வலதுபக்கத் தட்டில் வைத்தான். ஒரு கிலோவிற்குச் சற்று அதிகமாகவே இருந்தது. தட்டிலிருந்து எடுக்க முயன்றான். "என்ன எடை போடுறப்பா? ...இந்த நாலு சுண்டைக்காய் ஒரு கிலோவா? ... இன்னும் ஒரு பழம் போடு... ஒங்க எடை மெஷின் எப்படினு எங்களுக்குத் தெரியாதா என்ன?" என்றார் அரங்கசாமி. அந்த இளைஞனுக்கு அப்போதுதான் தன் காதில் விழுந்த கதலிப்பழம் சிங்காரத்தின் வார்த்தைகளின் அர்த்தம் விளங்க ஆரம்பித்தது. வேண்டா வெறுப்பாய் ஒரு சிறிய பழத்தைத் தேடி எடுத்துத் தட்டில் போட்டான் அந்த இளைஞன். "அது எதுக்கு! நீயே வெச்சுக்க! என்று மீண்டும் அங்கிருந்து நகர முயன்றார் அரங்கசாமி. இளைஞனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அந்தச் சிறிய பழத்தைத் தட்டிலிருந்து எடுத்துவிட்டு ஒரு பெரிய பழத்தைப் போட்டுத் தட்டை அரங்கசாமியிடம் நீட்டினான். தட்டிலிருந்த ஐந்து பழங்களை எடுத்துத் தன் பையில் போட்டுக்கொண்டு தட்டை அந்த இளைஞனிடம் தந்துவிட்டு, தனது சட்டைப் பையிலிருந்து நூற்று ஐம்பது ரூபாயை எடுத்துக் கொடுத்துவிட்டு நகர்ந்தார் அரங்கசாமி. தன்னுடைய இருசக்கர வாகனம் நிறுத்தப்பட்டிருந்த இடத்தை நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்த அரங்கசாமியை அந்த இளைஞன் பார்த்துக்கொண்டே நின்றான், கண்களில் அனலுடன்.

அரங்கசாமி வீடுவந்து சேர்ந்தார். காய்கறிப் பையை வாங்குவதற்கு வாசலில் நின்றுகொண்டிருந்த தனது அப்பாவிடம் கொடுத்துவிட்டு வீட்டிற்குப் பின்புறம் இருக்கும் குழாய்க்குச் சென்று கைகால்களை நன்றாகக் கழுவிவிட்டு வீட்டிற்குள் நுழைந்தார். வழக்கம்போல, தன்னுடைய இரண்டு மகள்களிடமும் எப்படியெல்லாம் பேரம் பேசி, சாமர்த்தியமாக, வியாபாரிகளிடம் ஏமாறாமல், காய்கறிகளை வாங்கிய அனுபவம், அன்று சந்தையில் நடந்த விஷயங்கள் அனைத்தையும் ஒப்பிக்க ஆரம்பித்தார். ஆனால் அவர் ஆரம்பிக்கும் முன்பே, "செல்போனை இங்கேயே வைச்சுட்டுப் போயிட்டிங்களா?" என்று அவருடைய மூத்த மகள் பிரீத்தி குறுக்கிட்டாள். "ஏன் என்ன ஆச்சு!" என்றார் சற்றுப் பதற்றத்துடன். "அம்மாவுக்குப் படுக்கையிலிருந்து எழ முடியல. எழுந்தா, தல சுத்துதாம். தலையில வலது பக்கம் கொஞ்சம் கனமாக இருக்குதாம். தாடையெல்லாம் வலிக்குதாம். வாயைத் திறக்க முடியலையாம். உதடெல்லாம் உணர்வில்லாம மதமதப்பா இருக்குதாம்" என்றாள் பிரீத்தி. படுக்கையறைக்கு விரைந்தார். வலி தந்த அனத்தலுடன் அமுதா படுக்கையிலிருந்தார்.

அரங்கசாமியின் இரண்டாவது மகள் ஆனந்தி அமுதாவின் நெற்றிப்பொட்டுகளை மெதுவாக அழுத்திவிட்டுக் கொண்டிருந்தாள். அமுதாவின் வேதனையைப் பார்த்த அரங்கசாமி உடனடியாகத் தனது உடைகளை மாற்றிக்கொண்டு வெளியில் வந்தார். தனது காரை தூசிகளிலிருந்து பாதுகாப்பதற்காகக் காரின்மீது போட்டிருந்த உறையை எடுத்துச் சுருட்டி ஒரு மூலையிலிருந்த பெட்டியில் வைத்துவிட்டு, பெரிய கேட்டைத் திறந்து தனது காரை எடுத்து வெளியில் நிறுத்திவிட்டு வீட்டிற்குள்ளே விரைந்தார். சற்று நேரத்தில் ஆனந்தி கைத்தாங்கலாக அமுதாவைக் கூட்டிக்கொண்டு காரில் ஏறினாள். அரங்கசாமியின் அப்பா காருக்கு அருகில் வந்து, "ஏம்மா? நானும்கூட வரவா?" என்றார். "வேண்டாம். மாமா.. சிரமம்.. நீங்க வீட்டிலேயே இருங்க.... பிரீத்தி சாப்பாடு செஞ்சு தருவா... சாப்பிட்டுக்குங்க... நாங்க சீக்கிரம் வந்துருவோம்" என்று வலியோடு முனகினாள் அமுதா. பிரீத்திக்கு அன்று கல்லூரியில் செய்முறைத் தேர்வு என்பதால் அவளைக் கல்லூரிக்குக் கிளம்பச் சொல்லிவிட்டு தனது அலுவலகத்தின் உதவி அலுவலர் ராம்மோகனைக் கைபேசியில் அழைத்து, தனக்கு அன்று தற்செயல் விடுப்பைப் பதிவு செய்துவிட உத்திரவிட்டார். அரங்கசாமி, அமுதா, ஆனந்தி ஆகிய மூவரும் கோயம்புத்தூரிலுள்ள ஒரு "சூப்பர் ஸ்பெஷாலிட்டி" மருத்துவமனைக்கு, பல்லடம்-சூலூர் வழியாக, விரைந்தனர்.

சரியாக 09.40 மணிக்கு மருத்துவமனையை அடைந்தனர். மருத்துவமனையின் பிரதான அரங்கின் நுழைவாயிலிலிருந்த விசாலமான வரவேற்பு அரங்கத்தில் பதிவு செய்துவிட்டு பதிவுச் சீட்டை எடுத்துக்கொண்டு பணம் செலுத்துமிடத்திற்கு விரைந்தார் அரங்கசாமி. அமுதாவையும் ஆனந்தியையும் அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டுச் சென்றார். பதிவுக் கட்டணம் நூற்றுப் பத்து மற்றும் மருத்துவர் கட்டணம் நானூறு ரூபாய். மொத்தம் ஐந்நூற்றுப் பத்து செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டார். அமுதாவிற்கான கோப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. அமுதாவையும் ஆனந்தியையும் அழைத்துக்கொண்டு வெளி நோயாளிகள் பிரிவுக்குச் சென்றார். அங்கே நாற்பது நிமிடங்கள் காத்திருந்தனர். அமுதாவின் எடை மற்றும் இரத்த அழுத்த அளவுகள் எடுக்கப்பட்டு அவருடைய கோப்பில் குறிக்கப்பட்டது. பின் பொது மருத்துவர் ராஜாதிராஜனை சந்தித்தனர். அவர் அமுதாவைப் பரிசோதித்துவிட்டு நரம்பியல் மருத்துவர் அருள்மொழிச் செல்வனைப் பார்ப்பதற்குப் பரிந்துரைத்து அமுதாவின் கோப்பில் அமுதாவிடமிருந்து கேட்டறிந்த அனைத்து அறிகுறிகளையும் மற்றும் குறிப்புகளையும் பதிவிட்டார். அங்கிருந்த செவிலியர் பார்-கோடு ஸ்டிக்கர் ஒட்டிய ஒரு சீட்டை அரங்கசாமியிடம் தந்து பணம் செலுத்திவிட்டு அறை எண் 1038-க்குப் போகும்படி அறிவுறுத்தினார். அரங்கசாமி அந்தச் சீட்டை வாங்கிக்கொண்டு மீண்டும் பணம் செலுத்துமிடத்திற்கு விரைந்தார். நீண்ட வரிசை அங்கிருந்தது. பொறுமையாக இருந்து மீண்டும் ஒரு நானூறு ரூபாய் கட்டி ரசீது பெற்றுக்கொண்டு அறை எண் 1038-க்கு அமுதாவையும் ஆனந்தியையும் அழைத்துக்கொண்டு சென்றார். அங்கிருந்த செவிலியர், மருத்துவர் அருள்மொழிச் செல்வன் இன்னும் ஒருமணி நேரத்தில் சரியாக 11.30 மணிக்கு உள்நோயளிகளைப் பார்த்துவிட்டு வந்துவிடுவார் என்றும் அதற்குள் சாப்பிடவில்லை என்றால், உணவகம் சென்று சாப்பிட்டுவிட்டு வந்துவிடுங்கள் என்றும் அரங்கசாமியிடம் கூறினார். அரங்கசாமி அமுதாவையும் ஆனந்தியையும் உணவகத்திற்கு அழைத்துச் சென்றார். இரண்டு சப்பாத்தி ஐம்பது ரூபாய். மூன்று பேருக்கும் சப்பாத்தி வாங்கினார். அமுதாவால் ஒன்றிற்கு மேல் சாப்பிட முடியவில்லை. அரை டம்ளர்

காப்பி வேண்டும் என்றார். அரங்கசாமி வாங்கி வந்தார். ஒரு காப்பி இருபத்து ஐந்து ரூபாய். சரியாக நண்பகல் 11.15 மணியானது. மீண்டும் அறை எண் 1038-க்கு வந்தனர். மருத்துவர் அருள்மொழிச் செல்வன் மேலும் ஒருமணி நேரம் கழித்து, சரியாக மதியம் 12.30 மணிக்கு வந்தார். அமுதாவிற்கு முன் நான்கு நோயாளிகள் அழைக்கப்பட்டனர். ஐந்தாவதாக அமுதா அழைக்கப்பட்டார். அருள்மொழிச் செல்வன் அமுதாவைப் பரிசோதித்துவிட்டு பல்வகை இரத்தப் பரிசோதனைகள் செய்வதற்கும் மூளையை பிளைன் மற்றும் கான்ராஸ்ட் எம்.ஆர்.ஐ ஸ்கேன் செய்வதற்கும் பரிந்துரைத்தார். ஒரு மருந்துச்சீட்டு ஒன்றையும் கொடுத்தார். அதில் இரண்டு மாத்திரைகளின் பெயர்கள் மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதை மட்டும் அப்போதே அங்கிருக்கும் மருந்தகத்தில் வாங்கிக் கொடுக்கும்படி கூறினார். அன்று மாலை ஆறுமணி வரை அவர் இருப்பார் என்றும், பரிசோதனை அறிக்கைகள் கிடைத்துவிட்டால், தன்னை வந்து பார்க்கும்படியும் கூறி பார்-கோடு ஸ்டிக்கர் ஒட்டிய நான்கு பரிந்துரைச் சீட்டுகளையும் அரங்கசாமியிடம் கொடுத்தார். அரங்கசாமி மருந்தகத்திற்கு விரைந்து சென்று ரூபாய் நானூற்று ஐம்பது செலுத்தி மாத்திரைகளை வாங்கிவந்து ஆனந்தியிடம் கொடுத்து, மருந்துச் சீட்டைப் பார்த்து அமுதாவிற்கு மாத்திரைகளை எடுத்துக் கொடுக்கச் சொல்லி பணம் செலுத்துமிடம் சென்றார். அங்கே மருத்துவர் அருள்மொழிச் செல்வன் தந்த பரிந்துரைச் சீட்டுகள் அனைத்தையும் கொடுத்தார். ''26520 ரூவா கொடுங்க சார்'' என்றார் அங்கிருந்த பணம் வசூலிப்பவர். சற்று அதிர்ந்துபோன அரங்கசாமி எது? எதுக்கு? எவ்வளவு? என்று கூறும்படி கேட்டார். பணம் செலுத்துமிடத்திலிருந்த மேற்பார்வையாளர் சந்திரமோகன் அரங்கசாமிக்குப் பதில் செல்ல ஆரம்பித்தார். “பிளட் டெஸ்ட்டுக்கு 15620 ரூபா, எம்ஆர்ஐ-க்கு 11260 ரூபா'' என்றார். “எம்ஆர்ஐ-க்கு இவ்வளவுங்களா?'' என்றார் அரங்கசாமி. “சார், இது ரொம்ப அட்வான்ஸ்டுங்க சார்... 1.5 டெல்சா... உங்களுக்கு இரண்டும் பண்ணச் சொல்லியிருக்கிறார்... பிளைன் அண்டு கான்ராஸ்ட்....'' என்றார் சந்திரமோகன். “பிளைன் அண்டு கான்ராஸ்ட்டுன்னா?'' என்றார் அரங்கசாமி. “சார், நரம்புல ஒரு டை-பேஸ்டு மருந்து ஒன்னச் செலுத்தி ஸ்கேன் செய்வாங்க. அப்படியில்லாமல பிளைனாகவும் ஸ்கேன் செய்வாங்க. ஒங்களுக்கு இரண்டையும் செய்யச் சொல்லி, சார் எழுதியிருக்காரு'' என்றார். ''பிளட் டெஸ்ட்டுக்குப் பதினைந்தாயிரங்களா?'' என்றார் அரங்கசாமி. நாலு டெஸ்ட் எழுதியிருக்காருங்க... அத செஞ்சாத்தான் செல் மற்றும் டிஸ்யூ டேமெஜ் இருக்கானு முடிவுசெய்ய முடியுங்க...'' என்றார் சந்திரமோகன். அரங்கசாமி அனைத்திற்கும் பணம் செலுத்திவிட்டு ரசீதுகளை எடுத்துக்கொண்டு எம்ஆர்ஐ ஸ்கேன் செய்யும் இடத்திற்குச் சென்றார். அங்கிருந்த உதவியாளர் முதலில் இரத்தப் பரிசோதனையை முடித்துவிட்டு அறிக்கையோடு வரும்படி சொன்னார். மேலும் எம்ஆர்ஐ ஸ்கேன் இரவு பத்துமணி வரைக்கும் முன்பதிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றும், பத்து மணிக்கு மேல்தான் அமுதாவிற்கு ஸ்கேன் செய்ய முடியும் என்றும், அன்றே ஸ்கேன் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றும், மறுநாள்கூட பதிவுசெய்து ஸ்கேன் செய்துகொள்ளலாம் என்றும் கூறினார். அமுதாவின் உடல்நிலை சற்றுத் தேறியிருந்தது. மாத்திரை சாப்பிட்ட பின் அமுதாவிற்குத் தலைச் சுற்றல் வெகுவாகவே குறைந்திருந்தது. மறுநாள் காலையில் ஸ்கேன் செய்துகொள்ளலாமா என்று அமுதாவிடம் ஒப்புதல் பெற்று மறுநாள் காலை 10.00 மணிக்கு ஸ்கேன் செய்வதற்கு முடிவெடுக்கப்பட்டது.

அனைவரும் இரத்தப் பரிசோதனைக் கூடத்திற்குச் சென்றனர். அங்கிருந்த உதவியாளர் அரங்கசாமி கொண்டுவந்த சீட்டுகளைப் பெற்றுக்கொண்டு அமுதாவை மட்டும் அறைக்குள் அழைத்து இடதுகையின் முழங்கை மடிப்பின் மையக் குழியிலிருந்து பிரியும் நரப்பிலிருந்து இரத்தம் எடுத்து ஆறு குப்பிகளில் கொஞ்சம் கொஞ்சமாக அடைத்தார். மென் அறிக்கைகளை மருத்துவர் அருள்மொழிச் செல்வனுக்கு மின்னஞ்சலில் அனுப்பிவிடுவார்கள் என்றும், அச்சிடப்பட்ட அறிக்கைகளை மாலை 06.00 மணிக்கு பெற்றுக்கொள்ளலாம் என்றும் அந்த உதவியாளர் கூறினார். "இல்ல, நாளைக்குக் காலேல வாங்கிக்கறோம்" என்று கூறி அமுதாவையும் ஆனந்தியையும் அழைத்துக்கொண்டு உடுமலைக்குப் புறப்பட்டார் அரங்கசாமி. பிரீத்தி இரண்டு முறை அரங்கசாமியின் கைபேசிக்கு அழைத்திருந்தாள். காரில் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருக்கும்போது நடந்த அனைத்தையும் ஒன்றும் விடாமல் பிரீத்தியிடம் ஆனந்தி ஒப்பித்துக்கொண்டே வந்தாள். அமுதா சிறிது நேரத்தில் காரிலேயே தூங்கிவிட்டாள். உடுமலை வந்துதான் எழுந்தாள். மதியம் 03.30 மணிக்கே உடுமலை வந்து சேர்ந்துவிட்டனர்.

மறுநாள் காலை ஆனந்தி வீட்டிலிருந்து கொண்டாள். பிரீத்தி உடன் சென்றாள். சரியாக 10.00 மணிக்கு மருத்துவமனையை அடைந்தனர். எம்ஆர்ஐ ஸ்கேன் 12.30 மணிக்கு முடிந்தது. டை-பேஸ்டு மருந்து செலவிடப்பட்டதை வாங்கித் தரும்படி அரங்கசாமிக்கு ஒரு சீட்டைக் கொடுத்தனர். ரூபாய் 2760 செலுத்தி மருந்தகத்திலிருந்து வாங்கி எம்ஆர்ஐ பிரிவில் தந்தார். டை-பேஸ்டு மருந்து செலுத்துவதற்காக அமுதாவின் கையில் பதிக்கப்பட்டிருந்த வென்ஃபிலான் ஊசியை அவசர சிகிச்சைப் பிரிவில் பிரித்தெடுத்து விட்டு இரத்தப் பரிசோதனை அறிக்கையையும் வாங்கிக்கொண்டு அறை எண் 1038-இல் அருள்மொழிச் செல்வனுக்காகக் காத்திருந்தனர். பிரீத்தி பரிசோதனை அறிக்கைகளைத் திருப்பித் திருப்பி பார்த்துக்கொண்டு, தன்னுடைய மதியம் 03.15 மணிக்கு மருத்துவர் வந்தார். 03.45 மணிக்கு அமுதா அழைக்கப்பட்டார். இரண்டு அறிக்கைகளையும் பார்வையிட்டார். தனக்கு உதவுவதற்காக எதிரேயிருந்த செவிலியர்களிடம் அந்த அறிக்கைகளைத் தந்தார். "பயப்படும்படி ஒண்ணுமில்ல. ப்ளட் ரிப்போர்ட் எல்லாம் நெகடிவ்தான். எம்ஆர்ஐ-யும் எல்லா நார்மல்தான். ஹீமோகுளோபின்தான் கொஞ்சம் குறைவாக இருக்குது" என்றார். "ஆனா, ப்ளேட்லெட் கௌண்ட் அதிகமாக இருக்குதுங்களே, சார்!" என்றாள் பிரீத்தி. மருத்துவருக்காகக் காத்திருந்த நேரத்தில் ப்ளேட்லெட் கௌண்ட் அதிகமாகயிருந்தால் எந்த நோயின் அறிகுறி என்று கூகுளில் தேடிப்பார்த்து தெரிந்துவைத்திருந்தாள். "அப்படியா! எவ்வளவு?" என்று அங்கிருந்த செவிலியரைப் பார்த்துக் கேட்டார். "நான்கு இலட்சத்து முப்பத்து ஐந்தாயிரம்" என்றார் ஒரு செவிலியர். "அது ஒண்ணுமில்ல! ஹீமோகுளோபின் கம்மியா இருந்தா ப்ளேட்லெட்ஸ் அதிகமாகத்தானிருக்கும்" என்றார் மருத்துவர் அருள்மொழிச் செல்வன். நேற்று கொடுத்த மருந்துச் சீட்டை வாங்கி அதில் மேலும் ஒன்றை எழுதினார். 'லிவோஜென்.' "இரும்புச் சத்து மாத்திரை எழுதியிருக்கேன். எல்லாம் சரியாகிடும். பதினஞ்சு நாள் கழிச்சு வந்து பாருங்க" என்று கூறி அடுத்த நோயாளியின் பெயரைச் சொல்லி, தன்னுடைய மேஜையின் மீதிருந்த வேறோரு கோப்பு ஒன்றைக் கையில் எடுத்தார் மருத்துவர் அருள்மொழிச் செல்வன்.

அரங்கசாமி, அமுதா, பிரீத்தி மூவரும்

06.30 மணிக்கு உடுமலை வந்து சேர்ந்தனர். வரும் வழியில் அமுதா மெதுவாக ஆரம்பித்தாள். “எவ்வளவுங்க ஆச்சு?” என்றாள். “எல்லாம் கம்மிதான்” என்றார் அரங்கசாமி. “கம்மினா எவ்வளவுங்க?” என்றாள் அமுதா. “தெரிஞ்சு என்ன செய்யப்போற?. தூக்கம் வந்தா, தூங்கு” என்றார் அரங்கசாமி. “எவ்வளவுடி? உனக்குத் தெரியுமா?” என்று பிரீத்தியிடம் தாழ்ந்த குரலில் கேட்டாள். “எனக்கும் ஒண்ணும் தெரியலம்மா...” என்றாள் பிரீத்தி. “ஒடம்பத் தேற்றதப் பாப்பாளா? அது எவ்வளவு ஆச்சு! இது எவ்வளவு ஆச்சுனு தேவயில்லாம... நேத்துதான் ரெண்டு கிலோ மாதுள வாங்கிட்டு வந்தேன். நல்லா ஜூஸ் போட்டுக் குடிச்சு ஒடம்பத் தேத்தப்பாரு.... காப்பி எதுவும் குடிக்கிறியா?” என்றார் அரங்கசாமி. “சரிங்க! என்றாள் அமுதா. அமுதா அதிர்ந்து போகும் அளவிற்குச் செலவாகியுள்ளது என்பதைப் பிரீத்தியால் யூகித்துக் கொள்ள முடிந்தது. சூலூர் தாண்டி சாலையின் ஓரத்திலிருந்த ஒரு பெரிய ஹோட்டலின் முன் காரை நிறுத்திவிட்டு உள்ளே சென்றார். சிறிது நேரத்தில் ஒரு தட்டில் மூன்று காப்பித் தம்ளர்களை வைத்துக்கொண்டு ஓர் இளைஞன் வெளியே வந்தான். அவன் பின்னே அரங்கசாமி வந்தார். காரிலேயே இருந்த அமுதாவும் பிரீத்தியும் கொண்டுவந்த காப்பியை எடுத்துக் கொண்டனர். அரங்கசாமியும் அவர்களுடன் சேர்ந்துகொண்டார். மூவரும் காப்பி அருந்தினர். அங்கே தம்ளர்களுக்காகக் காத்திருந்த இளைஞனை அழைத்தனர். அந்த இளைஞன் ஏந்திவந்த தட்டில் தம்ளர்களை வைத்தனர். அரங்கசாமி தனது பர்ஸிலிருந்து ஓர் இருபது ரூபாய்த் தாளை எடுத்து அந்த இளைஞனிடம் நீட்டினார். பவ்யமாக அதை வாங்கிக்கொண்டு அந்த இளைஞன் ஹோட்டலுக்குள் சென்றான். அமுதாவும் பிரீத்தியும் அதிர்ந்துபோய் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். ”ஒங்க அப்பாவுக்கு என்னாச்சு!” என்று அமுதா பிரீத்தியிடம் மெல்ல முணுமுணுத்தாள். அரங்கசாமி காரைக் கிளப்பினார். உடுமலை வந்து சேர்ந்தனர்.

மறுநாள் காலை ஐந்தரை மணி. அரங்கசாமி உழவர் சந்தைக்குக் கிளம்பினார். சந்தைக் கூடத்திற்கு வெளியே வழக்கமான இடத்தில் தனது இருசக்கர வாகனத்தை நிறுத்தினார். சந்தைக்கு உள்ளே சென்று விலைப் பட்டியலைப் பார்க்கவில்லை. யாரிடமும் எந்த பேரமும் பேசவில்லை. முருகேசன், சிங்காரம், கமலம், வசந்தா, சண்முகம் அனைவரும் என்ன விலை சொன்னார்களோ அதை அப்படியே கொடுத்தார். எடை அளவைப் பற்றி பேசவில்லை. எவ்வளவு தந்தார்களோ அதை அப்படியே வாங்கி, பையில் போட்டுக்கொண்டார். பூச்சி அரிப்பைப் பற்றிப் பேசவில்லை. பூச்சி மருந்து வாடையைப் பற்றிப் பேசவில்லை. அனைத்தையும் வாங்கிக்கொண்டு நகர்ந்தார். அமுதாவிற்கு மாதுளைதான் அதிகம் தேவை என்பதால், அன்றும் இரண்டு கிலோ வாங்க முடிவு செய்தார். அங்குமிங்கும் பார்வையை ஓடவிட்டார். அதே இடத்தில் அந்த இளைஞன் இருந்தான். அவனை நோக்கி நகர்ந்தார். அந்த இளைஞனின் முகத்தில் பதற்றம் தொற்றிக்கொண்டது. “ரெண்டு கிலோ கொடுப்பா” என்றார். எதுவும் பேசாமல் பத்து பெரிய பழங்களை எடுத்துத் தட்டில் வைத்து அரங்கசாமியிடம் நீட்டினான். பத்துப் பழங்களில் எட்டுப் பழங்களை மட்டும் எடுத்துக்கொண்டு, இரண்டு நூறு ரூபாய்த் தாள்களைக் கொடுத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தார் அரங்கசாமி. தன்னுடைய இருசக்கர வாகனம் நிறுத்தப்பட்டிருந்த இடத்தை நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்த அரங்கசாமியை அந்த இளைஞன் பார்த்துக்கொண்டே நின்றான், கண்களில் புனலுடன்.

vasuaruntamil@gmail.com ■